ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2424/59 - 2025 පෙබරවාරි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.02.20
2424/59 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2024, திசெம்பர் 16 ஆந் திகதிய 2415/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் 'உளவியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி' என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, பின்வருவன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது:-

1A - PG 7034 — 284 (2025/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1. குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் நில அளவையியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(1.1) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர் தரத்தில்) ஒரே மற்றும் அதே அமர்வில் (அ) வகுதியில் (01) பாடத்திலும் (ஆ) வகுதியில் (02) பாடங்களிலும் சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்,

(அ) i. இணைந்த கணிதம்
ii. உயர் கணிதம்

(ஆ) i. கணக்கீடு
ii. பொருளியல்
iii. வணிகப் புள்ளிவிபரவியல்
iv. கல்வி
v. பௌதீகவியல்
vi. இரசாயனவியல்
vii. தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

அத்துடன்

(1.2) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (சாதாரண தரத்தில்) கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் (2) திறமைச் சித்தி (C) மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண சித்தியொன்று (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தரத்தில்) உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ஆகிய குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

3. குறைந்தபட்சம் 60 திறமை மதிப்பீடுகளுடன் செயற்கை நுண்ணறிவில் விஞ்ஞான முதுமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 10) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(3.1) பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து கணினி அறிவியலில், கணினி பொறியியலில் அல்லது தரவு விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி பட்டமொன்று; அல்லது

(3.2) இயையான துறையொன்றில் ஒரு வருட அனுபவத்துடன் பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து இயைபான துறையொன்றிலான இளமாணி பட்டமொன்று.

4. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம் லிமிட்டெட் ஆனது. குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| *நிரல் I*<br><br>பட்டம் | *நிரல் II*<br><br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| நில அளவையியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பீரஸ்சி சிறப்பு (நில அளவையியல் |
| உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்) |
| செயற்கை நுண்ணறிவில் விஞ்ஞான முதுமாணி | எம்எஸ்சீ (செயற்கை நுண்ணறிவு) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய**,
கல்வி, உயர்கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, பெப்புருவரி 18.

EOG 02-0187